**நெல் சந்தைப்படுத்தல் சபை - 2012**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

**1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.2.1 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலை**

சபை தொடர்ச்சியாக கொள்வனவு செய்திருந்த நெல் இருப்பை சந்தை விலை மற்றும் கிரயத்தினை விட குறைவான விலையில் விற்பனை செய்திருந்தமை காரணமாக அடுத்த போகத்தில் நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு தேவையான நிதியினைப் பெற்றுக்கொள்வதற்கும், விற்பனையினால் ஏற்பட்ட நட்டத்தை தீர்ப்பதற்கும் வருடந்தோறும் திறைசேரியிடமிருந்தும் அரசாங்க வங்கிகளிலிருந்தும் கடன்களை பெற்றுக்கொள்ளும் நடைமுறை முன்னைய ஆண்டுகளைப் போன்றே இவ்வாண்டிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. இந்த நிலை காரணமாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் ஒதுக்கம் ரூபா 2 பில்லியன் மறைப் பெறுமதியாக காணப்பட்டமையினால் அரசாங்கத்தின் அல்லது வேறு நிதி அனுசரணையின்றி சபையின் தொடர்ச்சியான நிலைத்திருப்புக்கு நிலவுகின்ற ஆபத்துக்கான தாக்கம் இல்லையென்பதனை மறுக்க முடியாதுள்ளது.

**1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

**இலங்கை கணக்கீட்டு நியமம் - 9**

கணக்கீட்டுக் காலப்பகுதியில் நிறுவனத்தின் காசு வெளிப்பாய்ச்சல்கள் மற்றும் உட்பாய்ச்சல்களை வெளிப்படுத்தும் விதத்தில் செயற்பாடுகளிற்கமைய காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த காசுப்பாய்ச்சல் கூற்றில் பின்வரும் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டமையால் அதன் சமப்படுத்தல் கணக்காய்வில் கேள்விக்குரியாக காணப்பட்டது.

(i) மீளாய்வாண்டுக்குரிய பெறுமானத்தேய்வின் அளவு ரூபா 5,255,270 ஆக காணப்பட்ட போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 5,379,590 எனக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) விரிவான வருமானக் கூற்றில் ரூபா 35,350,000 தொகையான மீண்டெழும் மானியம் ஏனைய வருமானங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதியீட்டல் செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் என மீண்டுமொருமுறை உள்ளடக்கப்பட்டிருந்தது.

(iii) மீளாய்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொள்வனவுகள் ரூபா 260,687,228 ஆக காணப்பட்ட போதிலும், காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் அது ரூபா 1,795,356 காசு வெளிப்பாய்ச்சல் எனக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

1998 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை ரூபா 1,647,368 கணக்காய்வுக் கட்டணங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 272,646,416 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள், ரூபா 3,862,937,224 பெறுமதியான நெல், சோயா அவரை, அரிசி மற்றும் வழிச்சரக்கு, அத்துடன் ஆலை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 36,896,844 கூட்டுத்தொகை என்பவற்றிற்காக முறையே நிலையான சொத்துக்கள் பதிவேடு, உரித்துறுதி, மெய்மையாய்வுச் சபை அறிக்கை, இருப்புப் பதிவேடு, இருப்பு மெய்மையாய்வு அறிக்கை, வழிச்சரக்கினையும் கடன்பட்டோர் மீதியினையும் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்கள் மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காமை காரணமாக திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்தவோ அல்லது மெய்மையாய்வு செய்யவோ முடியவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,811,390,434 இற்குரிய சீராக்கல் தொடர்பில் எவ்வித சான்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) தொங்கல் கணக்கில் காணப்பட்ட ரூபா 180,422,896 செலவு மீதியினை பதிவழிப்பதற்குத் தேவையான அங்கீகாரம் மற்றும் விபரங்கள் 2015 யூலை 31 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(5)(டீ) ஆம் பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டுடன் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம் தயாரித்து அமுலாக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 135 முதல் 139 வரையான பிரமாணங்கள் | நிதிக் கட்டுப்பாட்டுடன் தொடர்புடைய பணிகளை ஒப்படைத்தல் மற்றும் நிதி அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் என்பன இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 188(2) | முன்னைய ஆண்டுகளிலிருந்து முன் கொண்டுவரப்பட்டிருந்த வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் தேறாதிருந்த ரூபா 12,839,744 கூட்டுத்தொகையான 05 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 387 | உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கொன்றிலிருந்து காசோலைகளை வழங்குவதற்கு முன்னர் |

சாதகமான போதியளவு காசு மீதி காணப்படுகின்றது என கொடுப்பனவு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான 05 வங்கிக் கணக்குகளிலிருந்து பணமின்றி காசோலைகள் வழங்கப்பட்டிருந்தமையால் ரூபா 61,834,763 தொகையான வங்கி மேலதிகப்பற்று 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஏற்பட்டிருந்தது. அதற்காக திறைசேரியின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

| | |
|---|---|
| (iv) நிதிப்பிரமாணம் 756 | மீளாய்வாண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 272,646,416 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் மற்றும் ரூபா 3,862,937,224 தொகையான இருப்புக்கள் 7 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலப்பகுதி முதல் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2007 யூலை 25 ஆந் திகதிய 07/199/315/31 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இலங்கை விவசாய உற்பத்திகள் சந்தைப்படுத்தல் அதிகாரசபையினை கலைத்து அதற்குச் சொந்தமான சகல சொத்துக்களையும் பொறுப்புக்களையும் சபைக்கு கையேற்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 184,658,970 கூட்டுத்தொகையான நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்கள், கையிலுள்ள காசு, ஊழியர் முற்பணங்கள் போன்ற சொத்துக்கள் மாத்திரம் கையேற்கப்பட்டிருந்தன. ஏனைய சொத்துக்களையும் பொறுப்புக்களையும் கையேற்பதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2010 திசெம்பர் 16 ஆந் திகதிய அமைவிஞ்/10/2762/447/013 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், அரிசியினைக் கொள்வனவு செய்வதற்காக திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 2,000 |

மில்லியன் முற்பணத்தினை அரிசி விற்பனையிலிருந்து கிடைத்திருந்த பணத்திலிருந்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய போதிலும், ஆண்டின் போது அரிசி விற்பனையிலிருந்து கிடைத்திருந்த ரூபா 708,232,048 தொகையிலிருந்து இந்த முற்பணத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையின் நடவடிக்கைகளிலிருந்து ரூபா 1,996,230,034 செயற்பாட்டு நட்டம் ஏற்பட்டிருந்ததுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு இலாபம் ரூபா 263,796,088 ஆக காணப்பட்டமையால் நிதி விளைவுகளில் ரூபா 2,260,026,122 ஆன பாரிய பின்னடைவு காட்டப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நெல் இருப்பின் விற்பனைக் கிரயம் ரூபா 1,605,414,063 ஆல் அதிகரித்திருந்தமையும், கடன் மற்றும் மேலதிகப்பற்று வட்டி உள்ளடங்கலான நிதிச் செலவினம் ரூபா 238,009,870 இனால் அதிகரித்திருந்தமையும் என்பன இவ் வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1971 இன் 14 ஆம் இலக்க நெல் சந்தைப்படுத்தல் சபை அதிகாரச்சட்டத்தின் 3 மற்றும் 10 ஆம் பிரிவுகளின் படி, நெல் மற்றும் அரிசியினைக் குத்துதல், தீட்டுதல் மற்றும் தயாரித்தலை வியாபாரமொன்றாக பேணிவருதலும் தனிப்பட்ட ரீதியில் அரிசி ஆலைகளை பதிவுசெய்தல் நடவடிக்கையும் சபையினால் செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதிலிருந்து விலகி முறையற்ற விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அரிசி ஆலை உரிமையாளர்களிற்கு ரூபா 1,510,193,268 பெறுமதியான நெல் இருப்பு அரிசியாக மாற்றிப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அமைவிஞ்/13/0198/540/004 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு, நெல் மற்றும் அரிசி விற்பனை ஆகிய ஒட்டுமொத்த

செயற்பாட்டிலிருந்து 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபைக்கு ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 4,121.47 மில்லியனாகும். இந்த நட்டத்தை ஈடுசெய்வதற்காக திறைசேரியிடமிருந்து மானியமொன்றோ அல்லது அதற்குச் சமமான தொகையினால் பிணைக்கடன் எல்லையினை உயர்த்துமாறு கோரி வரிசை அமைச்சின் அமைச்சரால் 2013 பெப்ரவரி 12 ஆந் திகதி அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியின் கருத்துத் தெரிவித்தலின் படி எதிர்காலத்தில் குறைந்தபட்சம் நிதிசார் நட்டம் ஏற்படாத வகையில் செயற்படுவதனை உறுதிப்படுத்தும் திட்டமொன்று சபையினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறானதொரு திட்டம் சபையினால் 2015 யூலை 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சட்டரீதியாக உரித்தற்ற காணிகளில் ரூபா 7,392,035 கூட்டுத்தொகை செலவிடப்பட்டு களஞ்சியங்கள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அவற்றின் உரிமையினை முறைப்படியாக கையேற்பதற்கு இது வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையிலுள்ள வழிகாட்டல்களின் படி செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளப்படாது மீளாய்வாண்டில் 03 நெற் களஞ்சியங்கள், 03 உத்தியோகபூர்வ இல்லங்கள், அரிசி தயாரித்தல் நிலையம் மற்றும் அலுவலகக் கட்டிடம் என்பவற்றை திருத்துவதற்காக ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டிருந்ததுடன் முற்பணங்களைச் செலுத்துவதற்கான பிணைமுறிகளை பெற்றுக்கொள்ளாது ரூபா 17,553,456 முற்பணங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 8.13.3 ஆம் பிரிவின் பிரகாரம், ஒப்பந்த மதிப்பீட்டில் காண்பிக்கப்பட்டுள்ள எதிர்பாராத நிலமைகள் ஏற்பாட்டுத் தொகை மதிப்பிடப்பட்ட ஒப்பந்தத் தொகையில் 10 சதவீதத்திற்கு மேற்படாதிருக்க வேண்டிய போதிலும், மேற்படி ஒப்பந்தங்கள் தொடர்பில் அவ்வெல்லையினை ரூபா 8,898,550 ஆல் விஞ்சி கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) முறைப்படியான அங்கீகாரமின்றி ஒப்பந்தங்களை மேற்பார்வை செய்வதற்காக 60 வயதினை தாண்டிய ஓய்வுபெற்ற பொறியிலாளர் ஒருவர் மதியுரைஞராக நியமிக்கப்பட்டிருந்ததுடன், அவரால் மதிப்பீடுகள் பரிசோதிக்கப்பட்டமை குறித்து

எவ்வித உறுதிப்படுத்தல்களும் காணப்படாதிருக்கையில் 2011 ஆம் ஆண்டு முதல் கணக்காய்வுத் திகதியான 2013 ஆகஸ்ட் 02 ஆந் திகதி வரை ரூபா 280,500 கூட்டுத்தொகை மதியுரைக் கட்டணமாக செலுத்தப்பட்டிருந்தது. இருப்பினும், 2013 ஆகஸ்ட் 26 முதல் 30 வரையான காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையில் நிர்மாணங்களில் அதிக குறைபாடுகள் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 3.4 தெளிவான மோசடிகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 500 மில்லியன் பெறுமதிக்கு நிக்கவெரடிய பிரதேசத்தில் நெல்/அரிசி நிலையமொன்றை தாபிக்கும் செயற்திட்டத்திற்கு 2012 ஆகஸ்ட் 17 ஆந் திகதி தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் மீது வெளிநாட்டு நிதி ஒதுக்கீட்டை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டு வளத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் சிவில் நடவடிக்கைகளுக்காக மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 78.5 மில்லியன் (பெறுமதிசேர் வரியுடன்) தொகையில் ரூபா 5 மில்லியன் முற்பணத் தொகை 2012 பெப்ரவரி 02 ஆந் திகதி கொள்வனவு வழிகாட்டல்களிலிருந்து விலகியும் செயலாற்றல் பிணையின்றியும் அரசாங்க கூட்டுத்தாபனமொன்றுக்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த நிர்மாணம் 2015 யூலை 31 வரையிலும் இடம்பெற்றிருக்கவில்லை.

(ஆ) வங்கியின் கொடுப்பனவு விபரங்களின் படி, 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட நெற் தொகையின் பெறுமதி ரூபா 5,411.2 மில்லியன் ஆன போதிலும், இருப்பு பெறுவனவு பற்றுச்சீட்டுக்களின் படி ரூபா 5,361.6 மில்லியன் பெறுமதியான இருப்பு மாத்திரம் களஞ்சியத்திற்கு கிடைத்திருந்தது. இதற்கமைய, ரூபா 49.6 மில்லியன் பெறுமதியான நெல் இருப்பு பற்றாக்குறை வெளிப்பட்டதன் பின்னர் அக் கொடுப்பனவுகளையும் இருப்பு மீதியினையும் பரிசோதித்து இருப்பு மீதியினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி சபையின் தலைவரினால் 2013 சனவரி 28 ஆந் திகதிய பீஎம்பீ/எவ்1/01/2013 ஆம் இலக்க கடிதத்தினால் 05 வலய முகாமையாளர்களிற்கு பணிப்புரை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, அக் கொள்வனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் அனைத்தும் வலயங்களிலுள்ள பதவியணியினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளமையால் இருப்புக் குறைவு நட்டத்தை தொடர்புடைய தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும், அவ்வாறு இல்லையாயின் குறித்த வலய முகாமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டியேற்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2015 யூலை 31 ஆந் திகதி

வரை அந்த மீதியினை தீர்ப்பதற்கு அல்லது குறித்த வலய முகாமையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

செய்திப் பத்திரிகை கம்பனியொன்றில் ரூபா 127,000 பெறுமதியான பங்கு முதலீட்டிற்காக 2011 ஆம் ஆண்டிலிருந்து சபைக்கு பிரதிபலன்கள் கிடைத்திருக்கவில்லை.

**3.6 நிதிகளின் குறைப் பயன்பாடு**

2008 ஆம் ஆண்டில் இலங்கை விவசாய உற்பத்திகள் சந்தைப்படுத்தல் அதிகாரசபை நெல் விற்பனையிலிருந்து கிடைத்த பணத்தினை வைப்புச் செய்வதற்காக ஆரம்பித்திருந்த சேமிப்பு வைப்புக் கணக்கு 2010 ஏப்ரல் 26 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அக் கணக்கின் மீதி ரூபா 3,853,550 ஆக காணப்பட்டது. இப் பணத்தினை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்துவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**3.7 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கி மேலதிகப் பற்று மற்றும் கடன் மீதிகளை தீர்க்காமை காரணமாக மீளாய்வாண்டில் மேலதிகப்பற்று வட்டியாக ரூபா 25,091,760 தொகையும், வங்கிக் கடன் வட்டியாக ரூபா 520,181,969 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2012 யூலை 12 ஆந் திகதிய அமைவிஞ்/12/0815/504/041-I ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், தெரிவு செய்யப்பட்ட 5 வலயங்களில் 2013 ஒக்தோபர் 31 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட நெல் இருப்பு மெய்மையாய்வில் 16,853,527 கிலோ கிராம் நெல் குறைவு காணப்பட்டதுடன் அதன் மொத்தப் பெறுமதி ரூபா 506.09 மில்லியனாகும்.

(இ) பௌதீக மெய்மையாய்வுக்கு உட்படுத்தப்பட்ட 5 வலயங்களில் நெல் இருப்பை உரிய காலத்தில் விநியோகிக்காமை காரணமாக காலம் கடந்து போதல், உரிய விதத்தில் நிலத்திலுள்ள இராக்கைகளில் நெல்லை பொதிசெய்து வைத்திருக்காமை (போதியளவு நில இராக்கைகள் காணப்படாமை) காரணமாக களஞ்சியத்திற்குள் நீர் ஊற்றெடுத்து, அநேக களஞ்சியங்கள் மழை நீரில் மூழ்கியமையால் ரூபா 17.44 மில்லியன் பெறுமதியான 586,107 கிலோ கிராம் நெல் அழிவடைந்திருந்தது.

(ஈ) 01 மெற்றிக் தொன் அரிசி 247 அமெரிக்க டொலர் வீதம் 100,000 மெற்றிக் தொன் அரிசியினை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்வதற்கு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்டிருந்த தீர்மானத்தின் பிரகாரம் மீளாய்வாண்டில் 22,950 மெற்றிக் தொன் அரிசியினை ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்திருந்ததன் மூலம் சபைக்கு ரூபா 711.50 மில்லியன் தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தது. அத்துடன், ஏற்றுமதி நடவடிக்கைகளிற்காக அரிசியினை தயாரிக்கையில் அதன் பக்க விளைவாக தயாரிக்கப்படுகின்ற உடைந்த அரிசி இருப்பை கிலோ கிராம் 01 ரூபா 35 வீதம் கொள்வனவு செய்வதற்கு அரசாங்க நிறுவனமொன்று கோரியிருக்கையில் அதனைக் கருத்திற்கொள்ளாது முறையான அங்கீகாரமின்றி 01 கிலோ கிராம் ரூபா 17.86 வீதம் ஏற்றுமதி செய்யப்பட்டிருந்தமையால் ரூபா 23.29 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

இருப்பினும், 2013 மே 02 ஆந் திகதியிடப்பட்ட ''நெல் சந்தைப்படுத்தல் சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலாப நட்டக் கணக்கு மற்றும் அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கான கிரய முகாமைத்துவத் திட்டம்'' என்ற தலைப்பிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் அவதானிப்பின் படி, அரிசியினை ஏற்றுமதி செய்திருந்தமையால் ஏற்பட்டிருந்த நட்டத்திற்கான காரணத்தை முறையான விசாரணையின் மூலம் வெளிக்கொண்டுவந்ததன் பின்னர் நிதிப்பிரமாணங்கள் மற்றும் தாபன விதிக்கோவையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2014 யூலை 31 ஆந் திகதி வரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருகக்வில்லை.

(உ) அரிசி இருப்பை விற்பனை செய்யக்கூடிய நிலைக்கு கொண்டுவரும் வரை 01 கிலோ கிராம் சம்பா மற்றும் நாட்டரிசிக்காக முறையே ரூபா 35.90 மற்றும் ரூபா 33.90 கிரயம் செய்யப்பட்டிருந்த போதிலும், முறையான அங்கீகாரமின்றி 2011 ஆம் ஆண்டிலிருந்து சபையினால் அரசாங்க நிறுவனமொன்றுக்கு அந்த நெல்லை 01 கிலோ கிராம் முறையே ரூபா 31.50 மற்றும் ரூபா 25.50 வீதம் விற்பனை செய்திருந்தமையால் சபைக்கு ரூபா 334.04 மில்லியன் நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 239 நாட்கள் தாமதித்து 2013 ஒக்தோபர் 25 ஆந் திகதியே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த நிதிக்கூற்றுக்கள் திருத்தமாக காணப்படாமை காரணமாக 2014 ஆகஸ்ட் 18 ஆந் திகதி மீண்டும் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2015 மே 13 ஆந் திகதி மீண்டும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2012 திசெம்பர் 05 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் சபை கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதன் படி செயற்பட்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றுநிருபத்தின் 5.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றைக் காண்பிக்கும் விதத்தில் பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக சபைத் தலைவருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் வேண்டப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) உள்ளகக் கணக்காய்வு
(ஈ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(உ) இருப்புக் கட்டுப்பாடு
(ஊ) வருமானக் கட்டுப்பாடு